ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஆர்ய தர்மம்.

சரீரம் மனதுஇந்திரியங்கள் உள்ளவரையில் அவைகளின் தர்மங்களான பசி தாகம் காமம் குரோதம் விஷயப்பிரவிருத்தி இவைகள் இல்லாமலிருக்காது. சரீராதிகள் அற்றுப்போகும்பொழுதுதான் அவைகளும் ஒழியும். நம்முன்னோர்களுக்கும்சரீரேந்திரியாதிகளிருந்தபடியால் அவைகளின் தர்மங்களும் அவர்களுக்கிருந்தனஎன்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவைகள் அவர்களைமீறினதாயிருக்கவில்லை. அவைகளையடக்கியே அவர்கள் சாஸ்திரங்களுக்குக்கட்டுப்பட்டு அவ்வழியேநடந்து ஸுகத்தையடைந்தார்கள்என்பது அவர்களதுசரித்திரத்திலிருந்தே தெரிகிறது. தற்காலத்திலுள்ளவர்களுக்கோ வெனில் சரீரேந்திரியாதிதர்மங்கள் இவர்களுக்கடங்காமல் இவர்களை பாபப்படுகுழியில் தள்ளிவிடுகின்றன. ஆகவே பெரும்பாலும் பிராணிகள் எங்குபார்த்தாலும் பசியால்வாடி தாகத்தால்தபித்து காமத்தில் கட்டுண்டு கோபத்துக்காளாகி உயர்வு தாழ்வு தெரியாமலும் நல்லது கெட்டது தோன்றாமலும் பாபத்திலேயே பிரவிருத்திக்கிறார்கள். இதுபிராணிகளது இயற்கையன்றே கருதி அதைத்தடுக்க அனேக நியமங்களை விதித்திருக்கிறார்கள். பசியால்கெடாமலிருக்க, ஆகாரநியமத்தையும்காமாதிகளால் கஷ்டப்படாமலிருக்க சமதமாதிகளையும் வாக்கினால் கெட்டுப் போகாமலிருக்க ஸத்ய வசனத்தையும் மற்ற இந்திரியங்களால் துன்பப்படாமலிருக்க அனேக விருதநியமங்களையும் அவரவர்களுக்கேற்றவாறாக போதிக்கின்றார்கள். அந்தவழியிலேயேசென்றால் க்ஷேமத்தையடையலாமென்று தெரிந்துகொண்டவர்களும் தற்காலத்தில் அதன்படிநடக்கவில்லைஎன்றால் தெரியாதவர்களாநடக்கப்போகிறார்கள். ஆனாலும் அறியாதவர்கள் விஷயத்தில் அவர்களுக்கு நன்மையைக்கருதும் பெரியோர்கள் நல்லதைசொல்லாமலிருப்பது நியாயமாகாது. அதனாற்றான் நம்முன்னோர்களின் வழிநடப்பவர்களான ஸநாதநதர்மிகள் என்னகஷ்டப்பட்டாலும் எவனும் ஸ்வதர்மத்தை விடக்கூடாதென்று வலுவிலேவந்து வற்புறுத்துகின்றனர். அதைசில சீர்திருத்தக்காரர்கள் சரியானதாகச் சம்மதிக்காவிடினும் நமது ஆரியச்சிறுவர்களுக்கு க்ஷேமகரமா யிருப்பது பற்றி அவர்கள் அதைஉபேக்ஷை செய்யக்கூடாது. இங்குகண்டபடி நடந்து ஸ்வல்பஸுகத்தை பெருவதற்காக பின்னிட்டுப் பெரியதுன்பத்திற் காளாவது புத்திசாலிக் கழகல்ல. இங்கு கொஞ்சக் கஷ்டப்பட்டாலும் பின்னிட்டுப் பேரின்பம் பெறுவதற்கும்பிரவிருத்திப்பதே பெரியோர்களுக்குப் பிரியமானகாரியம். ஆகையால் நமது ஆரியச்சிறுவர்கள் ஸநாதந தர்மத்தையே சரிவா யனுஷ்டித்து ஸுகத்தை யடைவார்களாக

சுபம்

பத்திராதிபர்.

உ

ஆர்யதர்மம்.

பிரமோத-ஹூ கார்த்திகைமீ ௧௬௨

அதிக மழையால் நேரிட்ட துன்பம்.

நமது புண்ணியபூமியான பாரதகண்டத்தில் வஸித்துவரும் பாக்கியம் பெற்ற புண்ணியவான்கள் நீடூழிகாலமாய் தனத்தினாலும் தானியத்தினாலும் விக்கிரமத்தினாலும் மற்றுமுள்ள பற்பல நற்குணங்களாலும் நிறைந்திருப்பவர்களாய் இருந்ததுமன்றி விநயத்திற்கும் நல்லறிவிற்கும் ஸுகத்திற்கும் இடமாயிருந்தார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அவ்வாறிருந்த நம்பாரதவாஸிகள் இக்காலத்தில் அவைகளினின்று சிருகச் சிருக விடுபட்டு துன்பப்படுகிறார்களென்பதை பலதடவை கூறியிருக்கிறோம். அதை நினைத்த நம்மவர்மனம் அடிக்கடி துக்கித்துக் கலங்கி நிற்கின்றதென புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை. இதற்குக்காரண மென்னவென்று ஆலோசிக்கப் புகுந்தால் பலர் அங்குபல விதமாகக்கூறுவார்கள். அங்குஉண்மை இதுவாம்—யாகம்செய்வது முதலிய ஆறுகர்மங்கள் ஆஸ்திகர்களிடம் லோபித்ததாலோ அல்லதுதிரிபுரமெரித்த பாமசிவனாரிடம் பக்த்தியில்லாமையாலோ அல்லது முரனென்ற அஸுரனை வென்ற விஷ்ணுவையும் வலனைக் கொன்ற இந்திரனையும் மற்று முள்ள தேவர்களையும் பூஜிக்காமையாலோ, அல்லது கட்குடித்தல் மாம்சம் புசித்தல் அன்ன விக்ரயம் தைல விக்ரயம் நீலி (அவிரி) விக்ரயம் கன்னியா விக்ரயம் ஸமுத்திர தாணம் முதலிய அஸத் கர்மங்கள் ஆதிவர்ணத் தவரிடமும் இருந்து வருவதாலோ, அல்லது மனுமுதலாயினோர் சொல்லி வந்த சிரௌத கர்மங்கள் ஸ்மார்த்த கர்மங்கள் இவைகளை விட்டதினாலோ, அல்லது தாய்தகப்பன் குருதேவர் ஈசுவரன் ஆகிய இவர்களிடத்தில் நல்லெண்ணம் தவரிவிட்டதினாலோ, அல்லது மிகவுமிழிவான விதவாவிவாஹம் பிரௌடாவிவாகம் செய்துவருவதாலோ, அன்னியாயவழியில் பெண்டீரைப் படிப்பிவிப்பதினா

லோ, அல்லது மதாந்தாஸ்தர்களின் பள்ளியில் புகுந்து ஆரியச்சிறுவர்களையும் படிக்கச் செய்வதினாலோ. அல்லது சாஸ்திரம் நிந்தித்துவரும் ஏதேனும் ஓர் கொடிய நடக்கையினாலோ. இவ்வளவு திண்டாட்டம் ஏற்பட்டதாக அறிஞர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள். அப்படி இல்லாமற்போனால் மாதம் மும்மாரி பொழிந்து ஸகலஸஸ்யாதிகளும் ஸமிருத்தமாய் இருந்து ஸர்வப் பிராணிகளும் ஸுகித்திருந்த நமது தேசத்தில் ஒருகாலத்தில் மழையேயில்லாமலும் ஒருகாலத்தில் அதிகமழை பெய்து புயல் காற்றடித்து ஸமுத்திரம் கொந்தளித்து வெள்ளம் பெருகிவியாபித்து பயிர்கள் அழுக, நாத்துக்கள் அழியபயிரிடுபவர் பரிதபிக்க வீடுகள்விழ ஆடுமாடுகள் சாக மனிதர்களும்மாணமடைய மரங்கள் முறிய மார்க்கங்கள் ஒழிய நேர்ந்த துன்பங்கள் எழுத்தில் எழுதமுடியுமோ! வாக்கினாற்றான் சொல்லமுடியுமோ, மனதாற்றான் சிந்திக்க முடியுமோ என்று யாவரும் நினைக்கநேரிடுமோ. சமீபத்தில் நடந்த அதிகமழையினால் நேரிட்ட துன்பங்களை ரயில் மார்க்கமாய் யாத்திரை செய்தவர்களிலும் பத்திரிகை படித்தவர்களிலும் அறியாதவர் யாருமில்லை. இக்கொடும் இவ்வருஷத்தில் மட்டிலுமில்லை. வெகு நாளாகவே இத்துயாத்துயரத்திற்கு இத்தேசவாஸிகள் ஆளாக இருக்கின்றார்கள். இதற்குகாரணம் பிராணிகள் செய்யும் பாபமே யொழிய வேறில்லை. இனிமேலாவது ஸர்வஜனங்களும் ஜாக்கிரதையாக இருந்து ஸத்கர்மங்களை யனுஷ்டித்து க்ஷேமத்தையடைவார்களாக.

பத்திராதிபர்.

ஸநாதன தர்ம ஸம்ரக்ஷணமும் பிராமணர்களும்.

(௧)

'தஞ்சை ஜில்லா ப்ராமணர் ஸநாதன தர்ம சம்ரக்ஷண ஸபை' என்று ஒரு ஸபையானது தஞ்சையில் சென்ற வருஷம் ஆவணி மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது. இந்த ஸபையில் சென்ற வருஷத்தில் நடத்தப்பட்ட விஷயங்களும் ப்ராம்மண சமூகம் தற்காலத்தில் கவனிக்கவேண்டிய விஷயங்களும் ஸபை

யின் வர்ஷ பூர்த்தியில் நடத்தப்பட்ட ஸ்ரீ வேதவ்யாஸ மஹோத்ஸவத்தில் எடுத்துரைக்கப்பட்டு 'ஆர்ய தர்மம்' பத்ரிகை 15-வது புஸ்தகம் 30, 31, சஞ்சிகை 361 முதல் 367 பக்கங்களில் வெளி வந்திருக்கின்றன.

கலிகால ப்ரபாவத்தால் ப்ராம்மண்யம் நாளுக்குநாள் மலின தசையடைந்து வருகிறது. ப்ராம்மணர்கள் செய்யவேண்டிய கர்மாக்களை செய்யாமலும் தங்கள் குழந்தைகளை ஸநாதன தர்ம வழியில் கொண்டுவாராமலும் தப்பு வழியில் போவதைத் தடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யாமலுமிருந்து வருகிறார்கள். தற்காலத்தில் இங்கிலீஷ் படிக்கப்போகிற குழந்தைகளுக்கு நம் ப்ராசீன ஸநாதன தர்மத்தில் வாஸனையென்பதே இல்லாமல் அதில் நம்பிக்கையற்று துராசாரங்களே பழகிவருகின்றன. இப்படித் தயாரான குழந்தைகள் வயது முதிர்ந்து சட்டசபைகளில்போய் மேல் நாட்டுப் பழக்கப் பிசாசுபிடித்து ஆடுகின்றார்கள். ப்ராம்மணர்களுக்கு நல்ல காலம்தான் இங்கிலீஷ் படிப்புக்கு மதிப்புக் குறைந்து வருகிறது.

ஆகையால் அடிப்படையை சீர்திருத்த வேண்டிய நோக்கத்துடன் செகண்டரி ஸ்கூல்களுக்குப்போய் படிக்கிற உபநயனமான குழந்தைகளுக்கு ஸநாதன தர்மத்தை போதிக்கவும், ஸந்த்யாவந்தனம் முதலியதை அக்ஷரலோபம் ஸ்வரலோபமின்றி உச்சரிக்கும்படிசெய்து அர்த்தம் கற்றுக்கொடுக்கவும் முக்கிய வேதமந்த்ரங்களை அத்யயனம் செய்விக்கவும், 12 வயதுக்குட்பட்ட புருஷக் குழந்தைகளையும் ஸ்திரீ ஜாதிக்குழந்தைகளையும் கூடியமட்டில் சிஷ்டாசார வழிகளில் பழக்கும்பொருட்டும் ப்ராம்மணர்களுக்கு மட்டில் ப்ரத்தியோகமாய் 'ஆர்யமத பாடசாலை' என்று தஞ்சை மேலவீதியில் சென்ற ஜூன்மீ 12உயில் ஸ்தாபிக்கப்பட்டு இந்நகரவாசிகளான ப்ராம்மணர்களால் செலுத்தப்படும் ஸ்வல்ப சந்தாத்துகைகளைக்கொண்டு நடத்திவரப்படுகிறது. இந்த பாடசாலையில் பெண்குழந்தைகளுக்குள்பட ஸம்ஸ்கிருத பாஷையும், நீதி சாஸ்திரம், ஸம்க்ஷேப ராமாயணம், கோபிகா கீதம், ராகவாஷ்டகம் முதலானதும் கற்பிக்கப்படுகின்றன. இதர பள்ளிக்கூடங்களுக்குக் குறைவின்றி தமிழ், இங்லீஷ், கணிதம் முதலியவைகளும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

இந்த பாடசாலையில் இப்போது சுமார் 80 குழந்தைகள் 12 வயதுக்குட்பட்டவர்கள் படிக்கின்றார்கள். இப்படியே நடந்தால் அடுத்த வருஷத்தில் சுமார் 200 குழந்தைகள் வரையில் சேரலாம். இது தவிர செகண்டரி ஸ்கூல்களிலிருந்து ஸ்கூல் விட்டபிறகு சுமார் 20 உபநயனமான ஆண்குழந்தைகள் வேதாத்யயனம் செய்கிறார்கள். இங்கிலீஷ் படிப்பை ப்ராம்மணர்கள் தற்காலத்தில் உதர நிமித்தம் அதியாவசியமாய் கவனிக்க நேர்ந்துவிட்டதால் மேலேகண்ட வேதாத்யயனத்தில் அந்தந்தஸ்கூல்களிலுள்ள உபநயனமான பிள்ளைகள் சிரத்தையெடுக்கும்படி செய்வதற்கு இந்த ஸபையால் நியமிக்கப்பட்ட ஒரு வேதாத்யயன உபாத்தியாயரைக்கொண்டு அந்தந்த ஸ்கூல் கட்டடத்தில் அல்லது அருகாமையில் மாலையில் கொஞ்சநேரம் ஸந்த்யாவந்தன காலத்திற்கு முந்தி அத்யயனம் சொல்லிவைக்கவும், ஆசாரங்களை சீர்படுத்தவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஒரு உத்தேசமிருக்கிறது. இப்படிச் செய்யாத வரையில் ப்ராம்மணக் குழந்தைகளை ப்ராம்மணர்களென்று அழைக்க முடியாது. தொப்பியும் பாழ் நெற்றியும் தலை க்ராப்பும் முக க்ஷவரமும் பரவுகின்றது. இந்த விஷயங்களைக் கவனிக்க ஸநாதன தர்ம ஆஸ்திகர்கள் எல்லாவிடங்களிலும் ஏற்பாடு செய்யலாம்.

இதற்கெல்லாம் திரவிய சகாயமும் சிரத்தையுள்ள மனுஷியர்களும் முன்வரவேண்டும். க்ரைஸ்தவ மிஷின் சங்கங்கள் எப்படி வேலைசெய்கின்றன? அவர்களைப்போல் நம்மதம் பிறர்களுமனுசரிக்கும்படி செய்ய நாம் வேலை செய்யவேண்டியதில்லை. அவர்களுக்கு புத்திபக்குவமானால் அது தானே நடக்கும். அதற்கு ஜன்மாந்தர சுகிருதமிருக்கவேண்டும். அவரவர்கள் ஸ்வதர்மத்தை விடக்கூடாதென்பதும், பிறர் தர்மத்தை அவலம்பிப்பது ஆபத்தாய் முடியுமென்பதும் நம் கீதாசார்யாளுடைய ஆஞ்ஞாரூபமான உபதேசமானதால் ப்ராம்மணர்கள் ஸ்வதர்மத்தை விடாமலிருக்கும்படியான ஏற்பாடுகள் மட்டில் நாம் செய்யவேண்டியது நம் கடமையாகிறது. அப்படியே இதர ஜாதி ஸநாதன தர்மிகளையும் நடக்கும்படி செய்யவேண்டியது அவசியம். இதற்காகவாவது க்ரைஸ்தவ மிஷின்கள் சங்கம்போல் நாம்வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது.

இதுவரையில் நமது ஜில்லாவிலுள்ளவர்களும் ஐசுவர்யவான்களுமான நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் தெய்வ பக்தியில் சிறந்தவர்களாகவும் ப்ராம்மண விசுவாசிகளாகவும் அநேக வேத பாடசாலைகள் ஏற்படுத்தி நடத்தி வருவதால் வேத ஸ்வரூபத்தை நாம் இப்போது கொஞ்சம் காண்கிறோம், செட்டிமார்களுடைய முயற்சியும் உதாரத்தன்மையுமில்லாமலிருந்தால் ஸநாதன தர்ம வாசனை வெகு நாளைக்குமுன்பே யற்றிருக்கும். ஆனால் தற்காலம் ப்ராம்மணர்களுக்கு மேல்நாட்டு அநுசாரப்பழக்கம் மேலிட்டுவருவதைப் பார்ப்பதிலிருந்து அவர்களிடம் செட்டிமார்கள் வைத்திருந்த மரியாதை குறைந்து விட்டது. அதுவுமன்றி செட்டிமார்களுக்கும் வரவர மேல் நாட்டு மோஹத்தால் தெய்வபக்தி முதலானதும் முன்போலிராமல் குறைந்து வருகிறது. ஹிந்து ராஜாக்களால் ஏற்படுத்தப்பட்ட தர்ம சொத்துக்களும் மேலே கண்ட வழிகளில் உபயோகப்படாமல் வேறு வழிகளில் போய்க்கொண்டிருக்கின்றன. அதை மாற்ற நாம் சக்தியற்றவர்களாயும் சிரத்தையில்லாதவர்களாயுமிருக்கிறோம்.

ஆகையால் ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் ப்ராம்மணர்கள் இதுவரையில் உதாஸீனமாயிருந்ததுபோலிராமல் முன்வரவேண்டியதும் இதுவரையில் ஸநாதன தர்மரக்ஷண வீரர்களாயிருந்தவர்களும் ஆஸ்திக புத்தியுள்ளவர்களுமான செட்டிமார்கள் சத் கைங்கர்யத்தைக் கைவிடாது முன்போல் சிரத்தையாய் நடத்தவேண்டியதும் அவசியமாயிருக்கிறது.

சில்லரை வித்தியாசங்களைப் பாராட்டாமல் 'ப்ராம்மண்யம்' என்பதை மட்டில் பொதுவாய் எல்லா ப்ராம்மண மடங்களின் அதிபதிகளும் ஒரு மனதாய் கெவனித்து ப்ரசாரம் செய்யவேண்டியதற்குத்தக்க ஏற்பாடுகள் செய்வதே அவர்கள் கடமையாகும்

G. V. லெக்ஷ்மண சாஸ்திரிகள்.

ஆர்யாசாரரஹஸ்யம்.

முன்னோர் பெண்களைக் காத்தமுறையைச் சொல்லுகின்றோம். காலம் எவ்வளவு கடுமை பெறுகின்றதோ அவ்வளவு பிறரும் நம் வழக்கத்தைப் பரிகசித்துவருகின்றார்கள். ஆயினும்

ஒவ்வொரு கன்மங்களின் பயனையும் அனுபவத்தாலறிந்த நம்முன்னோர் பெருமையையுங் கசடறக் கல்விகற்ற இக்காலத்தவருமறியாதொழிந்திலர். பாருங்கள்! பெண்களுக்கியல்பில் மிருதுபாவம், (பேதமை) பரதந்திரதை, இல்லறுட்சி, சந்தானரட்சணம், சுகம், வணக்கம், துயரமேற்கும் ஆற்றலின்மை, காரியத்தில் எச்சமயமும் ஊக்கம் இவை எங்குமமைந்தன. விசேஷமாய் பரதகண்டவாசிகளுக்கு அக்னிகாரியம் பாகாதிகாரம் வீட்டை அலங்கரித்தல், பசுக்களை ரட்சித்தல், வரவு செலவு செய்தல், தானதர்மங்களைக் கணவனுடன் கலந்து நடத்தல் முதலியன பல. மேலும் சிலவிடங்களில் சந்ததிகளைக்காத்தல் அவைகளை நல்லவழியில் நடாத்தல் முதலியனவும் மிகும். இங்ஙன மிருக்க, சமய உண்மை அறிவில் முதிர்ச்சிபெற்ற நம்முன்னோர் இவ்விஷயத்தில் கொண்ட அற்புதமார்க்கத்தை சிறிது நிரூபிப்பாம்.

பண்டிதர்காள்! இங்குள்ள ரகசியத்தைச் சிறிது சிந்திக்க வேண்டும். பெண்பாலுக்கே கடுமைக்குறைவும் சாதுத்தன்மையும் எங்குமொக்க அமைந்ததோர்குணமாம். பறவைகளிலும் விலங்குகளிலும்கூட மற்றவர் தமக்குச்செய்யு மிடையூறை விலக்கிக்கொள்ளத்தக்க சாதனங்கள் ஆண்பாலிலேயேயன்றிப்பெண்பாலில் அடக்கம் அழகு இவை முதலியன அமைந்தன. மற்று பௌருஷ மென்பதும் கொடுமையென்பதும் பராக்கிரம மென்பதும் ஒக்கும். அது ஆண்பாலுக்கே இயலாம். முன்னொருக்கால் இவ்விஷயத்தில் சிறிது நிரூபித்தோமாயினும் ஜங்கம ஜீவவர்க்கங்களிலெங்கும் இச்சுபாவ மென்பதை இங்கு காட்டுவாம். உண்மை யாராய்ந்தால் கடவுள் படைத்த இப்பாருலகில் இஃதோர் பரமாத்புதமாய் விளங்கும். கிளிகள், குருவிகள், கோழிகள், மயில், புரு முதலிய பல பறவைகளிலும் மேற்கண்ட ஸ்திரீபுருஷ விவஸ்தையுண்டு. இவ்வுண்மையைச் சிறிது மற்றவரறிய உதாரணம் கூறுவாம். மனிதருக்கேற்பட்ட சமயசாஸ்திரங்களைப்போல் பட்சிகளுக்கும் விவாகாதி இல்லற விளக்கம் பெண்களை விட்ட பாவப் பிராயச்சித்தம் விபசார தோஷம் இவை இல்லை. ஆயினும் அவைகள் மனப்படி ஒருபெண்ணைச் சேர்ந்தால் அது கர்ப்பந்தரித்தகாலத்தில் அதை ஓர் மரத்தின் துவாரங்களில் குடியிருக்கச் செய்து போஷித்துவருவது வழக்கமாயிருக்கிறது. அவை முட்

டைகளை ஈன்றபிறகு அம்முட்டைகளுக்கு இடையறுது வெப்பம் தரவேண்டி தமது இருபட்சங்களால் அண்டங்களை மூடிக்காத்தி ருக்கச்செய்து ஆண்கிளி ஊரெல்லொம் சிற்றி தமது வயிற்றை நிறப்பி காலாலும் மூக்காலும் சிறிது நெற்கதிர் முதலியவற்றை எடுத்துப் பெண்ணிருக்குமிடத்தை நோக்கி வந்து அதற்குக் கொடுக்கும். அண்டங்கள் பருத்து உடைந்து குஞ்சுகள் வெளி வந்தால் அச்சாதி தாய்முலைப்பால் வளரும் சாதியன்றாதலின் அக்குஞ்சுகளைக் காக்கும் பெண்ணை நிறுத்தி ஆண் ஊர்சுற்றி ஆகாரத்தை அப்பெண்ணுக்கும் குஞ்சுகளுக்கும் கொடுக்கும். அப் பெண்சிறுநெற்களை வாங்கிமேற்றோல் நீக்கித் தன்வாயா னவின்று சொள்ளுக்கலந்த சோர்போலாக்கி மெல்ல குஞ்சுகளின் வாயிலி டும். அவ்வாண்கிளிக்கும் உனவுவேண்டுங் காலத்திலெல்லாம் பெண்ணையும் குஞ்சுகளையும் காத்தல் பெரியதோர் பணியாம். பட்சிகளை வளர்க்கும் உண்மையறிந்தவர் கிளிக்குக் கழுத்தில் சிவந்ததும் கறுத்ததுமான இருரேகைகள் உள்ளதே ஆண்கிளி யென்பர். அதன் வால் நீண்டும் மூக்குப்படர்ந்ததாயு மிருக்கும். பெருங்கிளியெனப்படும் வெள்ளைக்கிளி ஜாதியில் ஆண்கிளிக்கே தலையிலோர் பொன்னிறக் கொண்டையுண்டு. ஆயின் பெண் களையும் குழந்தைகளையும் காத்தல் ஆண்கள் கடமையென்பதைக் கல்லாதார்க்குக் காட்டுக்கிளியும் கற்பிக்கின்றதாம். அக்குஞ்சு களுக்குச் சிறிது இறகுண்டாய்த்தத்திக் குதித்துத் தடுமாறுமி டத்து இடம்விட்டு வழுவாது காத்தற்பொருட்டுப் பெண்கிளி யவ்விடத்தே யிருக்கும். ஆண் முன்போலவே தன்றொழில் நடத்தும். மேலும் பிரசவோபத்திரவம் எல்லாச் செந்துக்களு க்கு முளதேயாகையால் முட்டையிட்ட பறவைகளும் சிறிது காலமும் இடம் விட்டேகுவதில்லை. குழந்தைகளை ரட்சித்தல் எல்லா ஜங்கமங்களிலுமாணுக்கே கூடாமையாலஃது பெண்க ளின் காரியமேயாம். இங்ஙனம் குருவிகளிலும் ஆண் பெண் ணை யகத்தேயிருத்தி உச்சிவரையிலூர் சுழன்று ஆகாரத்தைத்தா மருந்தி அகத்துக்கும் கொண்டுவரும். பிரசவோபத்திரவம் முதலியன பெண்களுக்கியல்பென முன்குறித்தாற்போல ஊர்சுற்றி யுற்றாரைக் காத்தலில் உண்டாம் உபத்திரவத்தைச்சகித்த லாண்களுக்கும் சகஜமே. குருவிகளிற் கழுத்திற் கறுத்தது ஆண். வலியன் குருவிகளில் வால் நீண்டு சாம்பல் நிற

மாயும் கூறான மூக்குள்ளது ஆணும். அவைகளே காக்கைகளைக் குட்டும். அங்ஙனம் காக்கைகளிலும் சாம்பல்நிறமுள்ள கழுத்தினையுடையது ஆண். முற்றிலும் கறுத்தது பெண்கள். இவை குஞ்சுகளைக் காப்பாற்ற கூடுகளிலே யிருக்கும். குஞ்சுகளைக்காப்பாற்ற வகையறியாக் குயிலும் இதன் கூட்டிலேயே தன் குஞ்சுகளைக் கலந்துவைத்திடுமென்பர் உலகசரித்திரமறிந்தோர் மேலும் கோழிகளில் தலையிற் குஞ்சலமும் யுத்தத்தில் ஊக்கமும் கொடுமையும் அழகும் ஆண்களுக்கே. முட்டையிட்ட பெட்டைக்கோழி இருந்த இடத்திற்றானே முட்டைகளை அடைகார்க்க ஆண்கோழி மூக்காலாகாரம் கொணர்ந்து கொடுக்கும். மேலும் கிளி முதலிய ஜாதிகளைக் காட்டிலும் இச்சேவலில் ஓர் விசேடமுண்டு, அவை விசேஷமாய் பட்சம் உண்டானவுடன் பறந்தோடிவிடும். இவையோ இறகுண்டானபிறகும் தாயுடன் கூடவே திரிந்துக்கொண்டு வெகு அழகாய் தீனி பொறுக்கித் தின்றுவரும். மேலும் தனக்கு சுதந்திரமுண்டாகும்வரை பட்சிகளும் கூட தன் குஞ்சுகளை ரட்சிக்கின்றன அக்குஞ்சுகளை ரட்சிப்பதில் ஊக்கம் செலுத்திவரும் பெண்களை ஆண்கள் காப்பாற்றுவதும் அமைந்ததே. அங்ஙனம் மயில்களிலும் தலையிற்கொண்டையும் அழகியலாற்றோகையும் உள்ளது ஆணும். முட்டையிட்ட பெட்டையை அஃதே ரட்சிக்கும். புறாக்களுள் இல்லறம் மிக அழகு. அவ்விஷயம் அவை இணைபிரியாது திரிவதாற்றானே தெரியும் உண்மையறிந்தாராய்வோர்க்கு உலகத்திலுள்ள ஜங்கம சேதநஜாதிகளெல்லாம் பெண்களைக்காக்குமியல்பு ஆண்களுக்கும், பெண்களுக்கு அமைதியும் அடக்கமும் சிருஷ்டியில் அமைந்ததெனச் சொல்லவும் வேண்டுமோ. பசுக்களிலும் ஆவினத்தில் ஆணுக்கு முதுகில் கொண்டைபருத்தும் கொம்பு நீண்டும் வலுமைநிறைந்து மிருப்பது யாவருமறிந்ததே. பெண்ணினமோ அமைதியுடன் கன்றுகளைக் காப்பாற்றி அவைகளுக்குப் பால் சுறந்துவரும். அவைகள் அற்புதமாய் தன் கன்றிதுதானென வறிந்து பிறிதோர் கன்றுக்குப் பால் கொடாததும் ஆச்சரியமே! பாருங்கள். இரக்கமற்றபாவிகள் மாடுகளைக்கறக்க அவை இவர்களுக்குப் பாலைச் சுறக்காது உக்கிச் சுருக்கிவைத்திருந்து கன்றுகளைக் கண்டநோத்தில் சுறந்திடுவது வழக்கமே. ஒரு கன்று தாயில்லாமல் வருந்தினாலும் மற்றது

அதற்குப் பால் கொடுப்பதில்லை. இவ்வுண்மையறிந்தவர் அனேகம் தாயில்லாக் கன்றுகளைக் காப்பாற்றுவதற்காக முதிர்ந்த கன்றினுடைய தாயினிடம் கண்ணைக்கட்டி அவ்வேழைக் கன்றை ஊட்டவிட்டு வளர்க்கின்றார்கள். இதனால் பசுக்களிடத்தும் தன் குழந்தைகளை யாதரித்தல், மெதுத்தன்மை முதலியன பெண்களுக்கே யமைந்தனவாம். ஆதலாற்றான் ஆண்சிங்கத்துக்கே அழகிய நீண்ட தாடிகளும் படர்ந்த நகங்களும் உண்டு, பெண்ணுக்கில்லை. ஆண்கலைக்கு கோடு பெரியதாயுண்டு. பெண்ணுக்கில்லை என்பதாதி ஊகித்தறியவேண்டும். இங்ஙனம் சூக்குமமாய் ஊர்வனவற்றிலும் இவ்வித இல்லறமுண்டெனப் புராணங்களில் சொல்லுகின்றன. மேலும் ராமாயணத்தில் கேகயமஹாராஜனுக்கு எல்லாச் செந்துக்களின் விவகாரத்தையுமறிய சக்தியிருந்ததென்றும் அதில் ஒரு எறும்பின் கர்ப்புநிலைமையும் குறிக்கப்பட்டது. இங்ஙனமே காடை முதலியன பலவுள. இதிலறியவேண்டிய வுண்மையிது. ஒவ்வொரு ஜாதியிலும் பெண்ணினத்துக்குப் புருடனிவனெனவறிவுண்டாகுங்கால் முதலில் மனதிற்படுபவனிடத்தே காதல் பெருகி கற்புகைகூடும், ஆயின் அன்றுண்டாய காதல் முதிர்ச்சியால் நீண்ட ஸ்னேகமும், ஒன்றுக்கொன்று ஒற்றுமையுமுண்டாம். அவ்விடத்துண்டாகும் ஸ்னேகம் எளிதிற் குறையாது. ஆதலாற்றான் நல்லறிவையும் கற்பையும் விரும்பும் ஜாதியார் சிறுமையிலேயே பெண்களுக்கோர் கணவனை யமைத்து விடுகிறார்கள். மேலும் மனிதர்களுக்கும் மற்றைய ஜந்துக்களுக்குமுள்ள விசேஷமிது. மனிதர் காதல் மாறாது நிற்கவேண்டியது. அவைகட்கு மாறினும் குற்றமில்லை. அங்ஙனமிருக்க காலக்கொடுமையால் மக்கள் தமது நடையுடைகளை யடிக்கடி மாற்றவும் மற்றைய சேதனங்கள் அங்ஙன மில்லாதிருக்கவும் நேர்கின்றது. இளமையில் எட்டு வயதுக்குள் விவாகம் செய்தகன்னிகளுக்கு எந்தக்ஷணத்தில் உலகஸ்வபாவம் தெரியவருமோ அன்றே ஒரு புருஷஸ்வரூபம் மனதில்படும்படி நேரிடுகின்றது. ஆகவே அவரிடத்திலுண்டான வோர் அன்பு நீடித்திருக்குமென்றது ஆன்றோர் அநுபவத்தி லமைந்தகருத்து. ஆதலாற்றான் ஆரியர்களுக்கு இளமையிலேயே விவாகத்தைச் சூத்திரகாரர்கள் குறித்தனர். இங்ஙனமிருக்க உண்மையறியாது மேற்றிசையார் கொண்ட கோலத்தை

யே மிக முக்கியமாய்க் கொண்டொழுகும் சிலர் நமது சதாசாரங் களைத் துலைத்திட்டால் அஃதொன்றுகொண்டே நமதாசாரங்கள் குற்றமற்றனவாமோ. ஐய, அறிஞர்காள்! சிறிது கவனியுங்கள் மழைக்காலங்களில் அனேக கோடிகணக்காய் ஈசலென்ற புழுத் தோன்றி ஒரு க்ஷணத்தில் தன் பக்ஷத்தை இழந்து கீழேவிழுந்து இணை இணையாய் ஓடுவதைப் பார்த்ததில்லையா? அதில் முன்னே ஆண்செயவதும் பின்பெண்செல்வதும் ஸ்பஷ்டமாய் தெரியுமே. இவைகளுக்கப்படி ஏதேனும் விதியுண்டோ? பெண்களுக்கு எச் சாதியிலும் சுதந்தரமில்லையென்க, கொம்புள்ள ஜாதிகளாய மான் முதலியவற்றில் கொம்பின்மையானும், கொண்டையுடைய கோழி முதலியவற்றி லஃதின்மையானும் தோகையுடைய மயிலின் முதலியவற்றி லஃதின்மையாலும் தாடியுடைய சிங்கம் முதலிய வற்றி லஃதின்மையாலும் தந்தமுடைய யானைமுதலியவற்றி லஃ தின்மையாவும் படமுடைய பாம்புமுதலியவற்றில் படமின்மை யானும் புலிமுதலியவைகளிற் கோரப்பல்லின்மையானுமிங்ஙனம் மற்றவரை அச்சமுறச்செய்து தம்மிடமனுகாது செய்துகொள்ள தக்க சுதந்திரம் ஆணுக்கேயன்றி ஒன்றும் பெண்ணுக்கில்லையாம் மேலும் பெண்களுக்குப் பிரசவோபத்திரவம் சிருஷ்டியி லமைந் தாலும் குழந்தையைக் காத்தல் அவர்களுக்கே வியல்பாதலாலும் அவர்களென்ஞான்றும் சுதந்திராராகார். அவர்களுக்கு ஒருக்கால் சுதந்திரம் கொடுத்தாலும் அது நிர்வகிக்க முடியாததே. ஒரு பெரும்போர் முகத்தில் நின்று போர்செய்யும்படி ஓர் பெண்ணுக் குத்தாவளித்தால் சுபாவத்திலுள்ள ஓர் பெண்ணுக்கு அது முடி யுமா? பாருங்கள்! போர்முகம் சென்றிடில் நல்லுரு மாறும். குழவிகள் கதறிட ஊக்கமொழியும், பிள்ளை களீன்றிடப் பிணி களும் மலியும். தனமுதல்பாரம் தலை வணங்கிடச் செய்யும். ஆதலால் இன்னங்கைகள் ஆடவர்க்கு நிகரிலார். இதைமுறையே நிருபிப்பாம்.

ஆரியன்

நையாயிகருக்கும் வேதாந்திக்கும் சம்பாஷணை.

ஆன்மா ஞான சூன்யமா.

ஓர் வேதாந்தி தார்க்கிகனைக் கேட்டான், ஓ நையாயிக, ஒவ் வொரு திரவியமும் உண்டான காலத்தில் நிர்க்குணமாய் நிற்கு மென்றல்லவோ உமது விவஸ்தை, அங்ஙனமானால் உமது சாஸ்

திரப்படி நித்தியமான பரமாணுக்களில் ரூபம் முதலியவை நித்தியங்களா? அனித்தியங்களா? நித்யங்களாயின் கரியநிறமுள்ள மண்ணாற் செய்யப்பட்ட குடத்தில் செந்நிற முண்டாவது கூடாது. காரண குணமே காரியகுணத்திற்கு ஏதுவென்பது உமது சித்தாந்தமாகையால். அது அனித்தியமென்பீரேல் நித்யத்தின் குணங்களே வனித்தியமாகுமே. அப்படியானால் அனித்தியமான ஞானமுடைய ஆன்மாவுக்கெப்பொழுதும் ஞான மெப்படியிருக்கும்? உமது சித்தாந்தத்தில் ஞானத்துக்குச் சமவாயிகாரணம் ஆன்மாவே யன்றோ? ஞானமும் க்ஷணந்தோறும் மாறுவதுதானே, ஒருக்ஷணமாத்திரமுள்ள ஞான முண்டாம்பொழுது நித்தியமான வான்மா அதன்முன் சூனியமாயிருந்ததா? புதிய ஞானத்தாற் பழையஞான மொழியுமாதலின் என்றும் ஆன்மா ஞானமுடையவ னென்பீரேல் அது பொருந்தாது. அறிவு விருப்பம் முயற்சி மூன்று மொன்றையொன் றொழிக்கும் ஆன்மகுணங்களாதலால், இவைகளெல்லாவற்றிலும் ஞானம் தொலையுமே. அறிவான், விரும்புவான், முயல்வானென்ற முறையும் நீர் கூறியதன்றோ? விரும்பும் பொழுதும் முயலும் பொழுதும் விருப்பம் முயற்சியென்ற குணங்களிருக்குமே யன்றி ஞானமிராதே-ஆனால் அதிககாலம் ஞானசூனியனும் சிறிது காலம் ஞானியுமாகின்றான். மூர்ச்சை சுஷுப்தி முதலியகாலங்களில் முற்று மறிவின்மையால் அச்சமயம் ஞான சூனியனெனல்வேண்டும். தன் சுயரூபத்தை யறியும் தானென்ற வறிவும் அச்சமயமில்லை. ஞானமெல்லாம் ஓர் விசேஷத்தைக் குறிப்பதென உன் சித்தாந்தமாகையால் மேலும் நிர்விகல்ப ஞானமும் சவிகல்பத்திற்கே ஏதுவாதலால் உமதான்மா பெரும்பான்மையில் ஞானசூன்யன், அங்ஙனமாயின் ஆத்மாவுக் கறிவுடைமையென்ற லட்சனம் மூர்ச்சை சுஷுப்தி முதலிய காலத்தில் அவ்யாப்தியடைகின்றது. முயற்சிக்கும் காலத்தும் விருப்புங்காலத்துமப்படியே. இங்ஙனமே சொப்பனமும் சுஷுப்தியு மென்றோம். இப்படியே ஆன்ம குணங்களாகிய ஞானம் இச்சை முயற்சி இவை ஆன்மாவிடத்தொருங்கிராமையால் அவற்றின் கூட்டம் சேராது. ஆனால் ஜாக்கிரத்திலும் சொப்பனத்திலும் மூன்றிலொரு அம்சம்ஞானியும் மூன்றில் இரண்டம்சம் அஞ்ஞானியு மாகிறான். மூர்ச்சையிலும் சுஷுப்தியிலும் முற்றிலும் ஞான சூன்யனே. அப்படியாக மூன்று மவஸ்தையிலும் மூர்ச்சை

யிலும் விருப்பத்திலும் முயற்சியாலும் ஆன்மா ஞானஹீனனென்றால் அவனையெப்படி சேதனனென்பது. அனேககாலம் அறிவில்லாமல் சிறிதுகால மறிவுடைமையால் ஆன்மா அறிவிடமானால் முற்றும் அறிவின்றியிருத்தலால் அச்சமயம் அறிவீனனென்றுஞ் சொல்ல நேரிடுமே. ஆனால்ஞானசூன்யாத்மவாதம் உமக்குத்தான் திருப்திகொடுக்குமா? ஆத்மாவையே ஞான ரூபமென்றும், அதன் திரிபே இச்சாதிகள் (விருப்பம்) முதலியன வென்றும் சொல்லும் சித்தாந்தத்தி லுமக்குண்டான ஆட்சேபமென்ன? இங்ஙன மான்மா பெரும்பான்மையின் ஞான சூனியனென்ற தனது சித்தாந்தத்தை யெடுத்து வேதாந்தி கூறியவிடம், சிறிது தனசித்தாந்தத்தை யாலோசித்து தார்க்கிகன் நின்றான். வேதாந்தி அத்துடன்விடாமல் ஓ வித்துவானே, ஆத்மாவின் விசேடகுணங்களும் விபுவின் விசேஷ குணங்களும் பின்வரும் குணங்களால் நசிக்குமென்ற சித்தாந்தமு மதானால் ஆன்மாவினறிவை நசிக்கச் செய்யுங் குணங்கள் ஒன்றிரண்டல்ல, மற்று நூற்றுக்கு மேலாம்,

பாரும், வெறுப்பு புண்ணிய பாவங்கள் இன்ப துன்பங்கள் இவைகளெலாம் ஆன்மாவின் குணங்களே யன்றோ? அவைகள் மாறிமாறி ஆன்மாவிடம் இருக்குமாதலால் அவைகளால் ஆன்மாவினறிவொழிய என்றும் ஆன்மா ஞான சூனியனென்றே சொல்லவேண்டும். எங்கோ சிறிது ஞானமும் இடையேதோன்றுதலால் ஞானத்துக்கிடமான ஆன்மாவென்ற விலக்கணம் குறித்தோமெனின் தண்ணீராலங்கட்டியில் கடினமாய் நிற்றலுமதனிலக்கணமாமோ? தங்கம் வெப்பத்தால் கரைதலால் தேயுவினிலக்கணம் வெப்பத்தாற்கரைதலோ? அங்ஙனமாயின் அதுநியாயமோ? ஒரு வஸ்துவின்கண் பலகுணங்கள் மாறிமாறிவர அவற்றிலொன்றை லட்சணமாக்கலாமா? அப்படியானால் நிலத்துக்கு நாற்றமுடைமையை இலக்கணமாக்கியதுபோல் என் மஞ்சள் நிறமுடைமை இலக்கணமெனல் கூடாது, அன்னிறம் நீர் தேயு முதலியவற்றிற் கின்மையாலும் நிலத்திலும் பாகத்தான் மாறும் பலரூபங்களி றொன்றாதலாலு மிலக்கணமாத லொவ்வுமல்லவோ. அன்னிறம் என்றுமிராது, ஏதோ ஒரு சமயமிருத்தலா விலக்கண மாகாதெனின் மிகவழகு. ஆன்மாவுக்கு ஞான மிலக்கணமாமோ? இனி ஞானத்துடனிகழும் ஜாதியேயிலக்கணமெனின், ஹீ ஹீ! பெரும்பான்மையிற்றார்க்கிகன் ஆன்மா ஞான சூன்யம்

தானே. இனி நாற்றமுடைமை நிலத்துக்கிலக்கணம். குளிர்ச்சியுடைமை நீருக்கிலக்கணம். வெப்பமுடைமை தேயுவுக் கிலக்கணமாயின் அவை உற்பத்திபானகணத்தில் நிர்க்குணமாதலாலும் ஒன்றுக்கொன்று விருத்தகுணமுடைய ஈரவயவங்களாலுண்டாய பொருள் குணம்பெறுமையின் அங்கு அக்குணத்துடனிகழ்ந்த சாதியுடைமை இலக்கணமெனச் சொல்லுதலே கெதியாம். அங்ஙனமின்றி மாறிவரும் பல குணங்களில் ஒன்றை இலக்கணமெனக்கொண்டு அந்த நிகழும் வ்யாப்திக் குற்றத்தையொழிக்கவதனுடனிகழ்ந்த சாதியுடைமையை இலக்கணமாக்குதல் ஞாயமா? நிலத்தில் நாற்றம் ஏதேனு மொருபோதுளதோ? நீரிற் குளிர்ச்சியுமங்ஙனமேயோ? தீயிற் சூடும் சிறிதுகாலத் துளதோ? இனி ஆகாயத்துக்கு, ஒலிக்குக்காரணமாத விலக்கண மாவதுபோல் ஆன்மாவுக்கு மறிவுடைமை யிலக்கணமாமெனின் தார்க்கிகன் ஆன்மா பெரும்பான்மையின் ஞான சூன்ய னென்றதை நீர் பொறுத்தே தீரவேண்டும். இனி என்றும் ஞானம் வேண்டுமாயின் என்வழி கைக்கொண்டு இச்சைமுதலியவையெல்லாம் ஞான விகாரங்களேயென்றுவ தொத்துக்கொள்ளும், மேலும் உமக்கான்மா விபு. ஓர் சரீரத்தில் மட்டும் ஒருகாலத் தறிவுடையவன். ஆகவே ஓர் சிற்றிடத்தே யவன் அறிவுடையவனுவன். ஓர்சிறுகாலத்தே வறிவுடையனென்று முன் நிரூபித்தோம். ஆபின்காலதேசங்களில் ஓர் சிறு பாகமே ஆன்மா ஞானமுடையவனுக வனேக பாகத்தில் ஞான சூன்யனே. உண்மையில் குடம் முதலிய பொருள்கள் ஞானம் இச்சை முயற்சிகளுக்கு விஷயமாய் நிற்றலால் அவைகளின் விஷயமெனப் படுவதுபோல் ஆன்மாவும் மேற்கண்ட குணங்களை சமவாயசம்பந்தத்தாற் பெற்றவனேயன்றி சொரூபத்தால் அவனஞ்ஞானமே (ஞானமல்லாதவனே.) இங்ஙனம் காலதேசங்களாற் பெரும்பான்மையா லஞ்ஞானியும் சொரூபத்தால் முற்றும் அஞ்ஞானமு மாவதல்லவோ தார்க்கி கான்ம சொரூபம். இங்ஙனமனுபவ விருத்தமான இச்சித்தாந்திகளை ஞான ரூபனே ஆன்மாயென ஸ்தாபிக்கும் வேதாந்திகள் என்ஜயிக்கமாட்டார்கள். ஞான சூன்யான்மவாதிகள் பண்டிதர் எதிர்ப்படாத விடங்களி லொருவாறு பெருமை பெற்று தாமும் பண்டிதரென அபினயப்பார். அன்றிபண்டிதர்சபையிலேதும் பேசவல்ல.வால்லர் ஓ நையாயிக, உமது வாயை யடக்குவதிற்சிறிதா யெமது முன்னோர் கொண்ட காள்கையாம்.

ஆரியன்.

போதாயன அமாவாஸ்யா.

இவ்விஷயத்தில் ஆசங்கை அவச்யமில்லையேனும், கேட்போரும், மற்றோரும் திருப்திபெறப் பதிலளிப்பாம்.

1. போதாயனிகள் மேற்கண்ட அமாவாசை தினத்தில் பிரத்யாப்திகம் செய்கிறதா? மறுதினமான அமாதிதியிலா? என்பதல்லவோ கேள்வி? இதில் போதாயன, காத்யாயன ஸூத்திரக்காரர்களில், பண்டித, பாமரர் ஈராகவுள்ள யாவரும், (அமா) "தர்ச்சிராத்தம் முதல்நாளும், அமாதிதி, (மிருததிதி) மறுநாளும்" என்று கசடறக் கூறுகின்றனர். ஆயினும், பிரமாணமல்லவோ பெரிது? அந்தப் பிரமாணமும் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

(2) வைத்யநாத தீக்ஷிதீயத்தில், திதிநிர்ணயகாண்டம், இஷ்டிகால நிர்ணயப் பிரகரணத்தில், அமாவாஸ்யை அபராஹ்ணத்தில் இருந்தால் ருக், யஜுஸ்ஸாம வேதிகளும்'ஸாயாங்ஹத்தில் இரண்டு மூன்று நாழிகை இருந்தால், போதாயான, கண்வர்களும், அமாவாஸ்யையாகக் கொள்ளவேணும். சிரார்த்தத்திலும் இம்மாதிரியே திதியை கிரகிக்கவேணும், என்று காத்யாயன வசனமுளது.

சதுர்தசி பூர்ணமாயும் அதற்கடுத்துவரும் துவிதீயை குறைந்தும் வந்தால் அமாவாஸ்யையில், ஸ்தாலீபாகமும் இஷ்டியையும் செய்து சதுர்தசியில், அமாசிராத்தமும் அன்வாதானமும் செய்ய வேண்டுமென்று போதாயன வசனங் கூறுகிறது,

முற்கூறிய காத்யாயன வசனத்தில் 'சிராத்தத்திலும்' என்று சொல்லியிருப்பது தர்சசிரார்த்தமென்றுத் தாத்பர்யமேயொழிய பிரத்யாப்திக சிராத்தமல்ல.

ஓர் போதாயனியோ, காத்யாயனியோ, தான் செய்யவேண்டிய சதுர்த்தசி திதி சிராத்தத்தை போதாயன அமாவாஸ்யை தினத்தில் செய்கிறார். அன்றே அமாதிதி சிராத்தத்தையும் செய்வதென்றால், திதித்வயமாயிருக்க வேண்டும். அன்றோ திதித்வயமில்லை. சதுர்தசி திதி என்பது நிச்சயம். ஷண்ணவதி (96) சிராத்தமும் செய்பவர், போதாயன அமாவாஸ்யை தினம் அமா சிராத்தம் செய்து சரிதார்த்த மடைகையில் மிருத திதியான அமா திதி சரிதார்த்தமடையாதோ என்று கேட்டவர்களுக்கு 96-ல் சேர்ந்த அந்த அமை, ஓர் புண்யகால யோகமென்றும், மிருத திதி வேறு என்றும், கீழ்வரும் பிராமணத்தால் தெரிவிப்பாம்.

(3) எல்லா வேதிகளும் பிரதிமாஸமும் ஒரு வருஷம் வரையிலும் ஒவ்வொரு வருஷத்திலும் இறந்த தினத்தில் சிராத்தம் செய்ய வேண்டும்,

ஸ்ராத்தகாண்டத்தில்,

मृतेऽहनि च कर्तव्यं प्रतिमासं च वत्सरम् ।
मृतेऽहनि मृततिथौ इत्यर्थः ।
यस्यां तिथौ मृतिः प्राप्ता तस्यामेवाब्दिकं चरेत् ।
तिथिनक्षत्रवाराणां तिथिरेव बलीयसी ॥

திதி, வாரம், நக்ஷத்திரம் இவைகளுக்குள் திதியே முக்யமானது.

मृतेहनिपितुर्यस्तुनकुर्याच्छ्राद्धमादरात् ।
वत्सरान्ते मृतेऽहनि । वर्षेवर्षेमृतेऽहनि ॥

மேற்கண்ட விதிபரமான வசனங்களும், செய்யாவிடில் தோஷப் பிரதிபாதகங்களான வசனங்களும், மரண தினத்தையே முக்ய மாயும், தின சப்தத்திற்கு 'திதி' என்று அர்த்தமென்றும் கூறின படியாலும் இம்மாதிரி பல வசனங்களுமிருப்பதாலும் திதியை விட்டுப் பிரத்யாப்திகஞ் செய்ய எள்ளளவேனும் இடமில்லை.

(4) அந்த திதியும்,

अपराह्णव्यापिनी स्यात्पार्वणे सा तिथिर्भवेत् ।
अपराह्णे पितृणान्तु तत् प्रदानं विशिष्यते ॥
पूर्वाह्णे दैविकं कार्यं अपराह्णे पितृक्रिया ।
अपराह्णः पितृणान्तु ह्यपराह्णानुयायिनी ॥
तिथिं तेभ्यो यतो दत्तो ह्यपराह्णः स्वयंभुवा ।
अपराह्णे तु पैतृकं । श्रुतिश्च—अपराह्णः पितृणाम् ॥

இம்மாதிரியான பல்லாயிர வசனங்கள் பார்வணச்ஸிரார்த்தத்திற்கு அபராஹ்ண காலத்தையே விதிக்கின்றன. இந்த அபராஹ்ணத் திலும் மிருத திதியின் ஏற்றக்குறைச்சலைக்கொண்டு நிச்சயிக்க திதி நிர்ணய காரிகையும் நமது பத்திரிகை வாயிலாக வெளிவந்தி ருப்பதை நேயர்கள் அறிவார்கள்.

மேற்கண்ட விஷயங்கள் பெரியோர்களைக் கேட்டும், பார்த் தும், ஆராய்ந்தும் எழுதப்பட்டன. சித்தாந்தத்திற்கு பண்டிதர் களே சரணம்.

பஞ்சகவ்ய விஷயம், நிர்ணய ஸிந்து, ஹேமாத்ரி இவைக ளில் பிராயச்சித்தப்பிரகரணத்தில் விஸ்தாரமாயிருப்பதால் அங்கு கண்டு கொள்ளவும். பத்திரிகையில் வெளியிடுவது விரும்பக் கூடியதாயில்லை.

சுபம்

"கிருஹ்யக்ஞ" வீ. உமாமகேச்வர சாஸ்திரி.